நகராட்சி அலுவலகம்
பொன்னேரி .

கூட்டம் எண். 28/ 2023 நாள். 27.10.2023

## சாதாரணக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத் தலைவர் டாக்டர் . திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் M.B.B.S., D.G.O அவர்களின் தலைமையில் 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31.10.2023 செவ்வாய்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நடைபெறும் . அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட உள்ளதால் துணைத்தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நகர்மன்றத்தலைவர்**
**பொன்னேரி நகராட்சி**

## நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்

### பொருள் எண் 1

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் அக்டோபர் 2023 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மான எண்: 322 நாள்: 31.10.2023

**தீர்மானம்:** ஆணையாளர் அவர்களின் October 2023 மாத நாட்குறிப்பு மன்ற பதிவிற்கு அனுமதி அளிக்கிறது

### பொருள் எண் 2

இந்நகராட்சியின் பொறியாளர் அவர்களின் அக்டோபர் 2023 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மாண எண்: 323 நாள்: 31.10.2023

**தீர்மானம்:** பொறியாளர் அவர்களின் October 2023 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக மன்றம் அனுமதி அளிக்கிறது.

### பொருள் எண் 3

பொன்னேரி நகராட்சி வார்டு எண் 1 முதல் 27 வரை உள்ள சொத்துவரிதாரர்களுக்கு சொத்துவரி மற்றும் குடிநீர் வரி நிலுவை வைத்திருப்பவர்களுக்கும் , நடப்பாண்டு வரித்தொகை செலுத்த வேண்டியவர்களுக்கும், காலிமனை வரி செலுத்த வேண்டியவ மனை உரிமையாளர்களுக்கும் SMS மூலமாக குறுந்தகவல்கள் அனுப்பப்பட்டது. மேலும் Voice Recorder மூலமாக வரி இனங்கள் தொடர்பாகவும், சொத்துவரி செலுத்துமாறும் குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டது. இப்பணி செய்திட்ட வகையில் Nano Bytes நிறுவனம் மூலமாக ரூ.31627/-

வழங்குமாறு Invoice வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட நிறுவனத்திற்கு தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு .

<u>அலுவலக குறிப்பு</u>

1 பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கிடலாம்
(ந.க.எண் 1067/2023 /அ2 )

நகர்மன்ற தீர்மான எண்: 324 நாள்: **31.10.2023**

**தீர்மானம்:** பல்வேறு நிலுவையிலுள்ள வரி செலுத்த வேண்டிய மனை உரிமையாளர்களுக்கும் SMS மூலமாக குறுந் தகவல்கள் அனுப்பப்பட்டது. இப்பணி செய்திட்ட வகையில் , Nano Bytes –க்கு ரூ.**31627/–** தொகை வழங்கிட, செலவினை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 4

பொன்னேரி நகராட்சி வார்டு எண் **1** கஜலட்சுமி நகர் **2**வது தெரு , **3**வது தெரு , மூன்றாவது முதல் குறுக்கு தெரு மற்றும் மூன்றாவது **2**வது குறுக்கு தெரு மண்சாலையாக உள்ளதால் மழைக்காலங்களில் பொதுமக்கள் பயன்படுத்த மிகவும் சிரமமாக உள்ளதாக புகார் தெரிவித்துள்ளனர். எனவே மேற்படி இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு தார்ச்சாலை அமைக்க தயார் செய்த உத்தேச மதிப்பீடு ரூ.**19.50** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

<u>அலுவலக குறிப்பு</u>

1 மன்றம் அனுமதி அளிக்கலாம்
(ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 325 நாள்: **31.10.2023**

**தீர்மானம்:** Wd 1 – Gajalakshmi Nagar – 2வது தெரு, **3**வது தெரு, **3**rd Cross St., 2nd Cross Street – தார்ச்சாலை அமைக்க ரூ.**19.50** L /– மன்றம் அனுமதி வேண்டப்பட்டு மன்றம் அனுமதி அளிக்கிறது. இப்பணிக்கு பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 5

பொன்னேரி நகராட்சியில் பொதுசுகாதார பணிக்கு தேவையான கிருமிநாசினிகள், புகைபோக்கி கொசு ஒழிப்பு மருந்துகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட குளோரினேஷன் செய்ய பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்பு தூள் , பினாயில், அபேட், இதர பொதுசுகாதார பணிக்கு தேவையான பொருட்களை ஆண்டு ஒப்பந்ததாரரிடம் கொள்முதல் செய்திட தோராய செலவினம் ரூ **5.00 /-** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 341 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 326 நாள்: **31.10.2023**

**தீர்மானம்:** பொது சுகாதார பணிக்கு, குளோரினேஷன் செய்ய தேவையான பொருட்களை ஆண்டு ஒப்பந்ததாரரிடம் கொள்முதல் செய்திட ரூ.5.00 /– இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்பட்டு, பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 6

பொன்னேரி நகராட்சி வார்டு எண் 14 தண்டபாணி விரிவாக்கம் சாலை மண்சாலையாக மிகவும் பழுதடைந்து உள்ளதால் மழைக்காலங்களில் பொதுமக்கள் பயன்படுத்த மிகவும் சிரமமாக உள்ளதால் மேற்படி சாலையை சீரமைத்து தர பொதுமக்கள் மற்றும் வார்டு உறுப்பினர் கோரியுள்ளனர். எனவே மேற்படி இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு கான்கிரீட் சாலை அமைக்க தயார் செய்த உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு

1 மன்றம் அனுமதி அளிக்கலாம்
( ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 327 நாள்: 31.10.2023

**தீர்மானம்:** Wd 14 தண்டபாணி விரிவாக்கம் – கான்கீரிட் சாலை அமைக்க மதிப்பீடு ரூ.5.00 இலட்சதிதிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்பட்டு, செலவினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்பட்டு, மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 7

பொன்னேரி நகராட்சி வார்டு எண் 10 வது வார்டுக்குட்பட்ட தேரடி பர்மா நகர் மற்றும் 11 வது வார்டுக்குட்பட்ட தேரடி 4வது குறுக்கு தெரு மிகவும் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் தேங்குவதால் பொதுமக்கள் மிகவும் சிரமமாக உள்ளதாக பொதுமக்கள் மற்றும் வார்டு உறுப்பினர் புகார் தெரிவித்துள்ளனர். மேற்படி சாலையை சீரமைத்து தர கோரியுள்ளனர். எனவே மேற்படி சாலையை சீரமைக்க தயார் செய்த உத்தேச மதிப்பீடு ரூ.14.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி அளிக்கலாம்
( ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 328 நாள்: 31.10.2023

**தீர்மானம்:** Wd 10, Wd 11, தேரடி பர்மா நகர், தேரடி 4வது Cross St., சாலைகளை சீரமைக்க சிமெண்ட்சாலைகள்அமைக்க மதிப்பீடு ரூ.14.80 – இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்பட்டு, பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

**<u>பொருள் எண் 8</u>**

பொன்னேரி நகராட்சி சென்னையிலிருந்து 35.00 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்நகராட்சியின் மொத்த மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின்படி 31025. தற்போதை மக்கள் தொகை சுமார் 36398 ஆகும். இந்நகராட்சி 8.04 சதுர கி.மீட்டர் பரப்பளவில் 27 வார்டுகள் உள்ளடக்கியுள்ளது. அரசாணை (நிலை) எண்.116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.07.12.2021–ன் படி தேர்வு நிலை பேரூராட்சியிலிருந்து 2ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அவ்வாறு தரம் உயர்த்தப்பட்ட 2ம் நிலை நகராட்சிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 10 நாள் 23.01.2023 ன்படி பொறியியல் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் 1 பட வரைவாளர் மற்றும் 2 பணி ஆய்வாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளது.

இதனால் பல்வேறு அரசு திட்டப்பணி மற்றும் பொது நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை வசதி பணிகளை கண்காணிக்கவும், மதிப்பீடுகள் மற்றும் வரைப்படங்கள் தயார் செய்ய வேண்டியுள்ளதால், அதற்கு தேவையான தொழில்நுட்ப பணியாளர்கள் Technical Assistant Grade-III 2 நபர்களை பொதுப்பணித் துறையின் செந்தார விலைப்பட்டியலின்படி தற்காலிகமாக தொழில்நுட்ப பணியாளர்களை வெளிக்கொணர்வு (Outsourcing) முறையில் பணியமர்த்திக்கொள்ளவும் மற்றும் நகராட்சியில் 5 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் 62.60 கி.மீ குடிநீர் பிரதான மற்றும் பகிர்மான குழாய் மூலம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சியில் குடிநீர் பராமரிப்பு பணியில் 7 நபர்கள் நிரந்தரமாக பணிபுரிந்து வருகிறார்.

எனவே குடிநீர் விநியோகம் செய்ய 1 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிற்கு 2 பணியாளர்கள் வீதம் 5 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு 10 பணியாளர்களும், குடிநீர் விநியோகம் செய்யப்படும் பகிர்மானக்குழாய் , பகிர்மான துணைக்குழாய் , பொதுக்குழாய் மற்றும் நகராட்சியில் பணிபுரியும் 7 குடிநீர் பணியாளர்கள் தவிர்த்து 7 நபர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் நிலையில் 7 நபர்கள் வெளிக்கொணர்வு (Outsourcing) முறையில் 6 மாத காலத்திற்கு பணியமர்த்திக்கொள்ளவும், தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 10.80 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண். 104/2023 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 329 நாள்: 31.10.2023

**தீர்மானம்:** நகராட்சியில் பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள் 7 நபர்கள் பணிபுரிந்து வருகிறார்கள், இவர்களை தவிர்த்து 7 நபர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விலை விகிதத்திற்குட்பட்டு நாள் ஒன்றுக்கு ரூ. 493/– 7 நபர்களை வெளிக்கொணர்வு முறையில் 6 மாத காலத்திற்கு பணியமர்த்திற்கு கொள்ளவும் தயாரிக்கப்பட்டு மதிப்பீட்டுத்தொகை ரூ.10.80 இலட்சத்திற்கு மன்றத்தின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 9

பொன்னேரி நகராட்சியில் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் உட்கார போதுமான பிளாஸ்டிக் நாற்காலிகள் இல்லாமல் உள்ளது. எனவே பொது மக்களின் வசதிக்காக 50 எண்ணிக்கை பிளாஸ்டிக் நாற்காலிகளும் மற்றும் அலுவலக முன்பகுதியில் வரிவசூல் செய்யும் பகுதியில் வரிசெலுத்த வரும் பொதுமக்களின் வசதிக்காக மின்விசிறிகள் 2 எண்ணிக்கையும், உள்ளூர் நிறுவனத்தில் விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளி கொடுக்கும் நிறுவனத்திற்கு பணி செய்யவும், இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 62,500 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

1 மன்றம் அனுமதி அளிக்கலாம்
( ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 330 நாள்: 31.10.2023

**தீர்மானம்:** பொதுமக்கள் உட்கார போதுமான பிளாஸ்டிக் நாற்காலிகள் 50 எண்ணிக்கை – பொதுமக்களின் வசதிக்காக மின் விசிறிகள் 2 எண்ணிக்கையும், இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.62500/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்பட்டு, மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 10

பொன்னேரி நகராட்சி வார்டு எண் 24 நக்கீரன் தெருவின் முடிவில் 130 மீ நீளத்திற்கு குடிநீர் பகிர்மான குழாய் இல்லாததால் பொதுமக்களுக்கு குடிநீர் சீராக விநியோகம் செய்ய முடியாத நிலை உள்ளது. ஏனவே மேற்படி 130.00 மீ நீளத்திற்கு 3 “ PVC குழாய் அமைக்க தயார் செய்த மதிப்பீடு ரூ. 55,000 /- க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

1 மன்றம் அனுமதி அளிக்கலாம்
( ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 331 நாள்: 31.10.2023

**தீர்மானம்:** வார்டு எண். 24 நக்கீரன் தெருவின் முடிவில் 130 மீ நீளத்திற்கு குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க தயார் செய்த மதிப்பீடு ரூ. 55000/– மன்றத்தின் அனுமதி கோரப்பட்டு மன்றம் அனுமதி அளிக்கிறிது.

## பொருள் எண் 11

இந்நகராட்சியில் அரசின் சிறப்பு நிதி 2022–23 ம் ஆண்டு நிதியின்கீழ் வார்டு எண் 2 பெரியகாவணம் பகுதியில் குடிநீர் விநியோக பயன்பாட்டிற்காக 2.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்திட ரூ.60.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்ட நிலையில் மேற்படி இடத்தின் மண் பரிசோதனை ஆய்வு மேற்கொள்ள Dr.MGR Educational and Research Institute , Periyar EVR Salai ( NH4 Highway) Maduravoyal. Chennai – 600095 கல்வி நிறுவனத்தை அணுகி பணி மேற்கொண்டமைக்கு ரூ.45000/– என பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி கல்லூரிக்கு ரூ.45000/– ஐ Dr.MGR Educational and Research Institute என்ற பெயரில் வங்கி வரைவோலையாக செலுத்தியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது .

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று Dr.MGR Educational and Research Institute தொகை வங்கி வரைவோலையாக செலுத்தியமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   ( ந.க.எண். 1049/2023 இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 332 நாள்: 31.10.2023

**தீர்மானம்:** வார்டு எண். 2 பெரியகாவணம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்திட, மன் பரிசோதனை ஆய்வு மேற்கொள்ள DR MGR Educational and Research Institute Periyar EVR Salai Maduravoyal – Chennai – 600095 ரூ.45000/– வங்கி வரைவோலையாக செலுத்தியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்பட்டு – மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 12

பொன்னேரி நகராட்சியில் உள்ள தாலுக்கா அலுவலக சாலை முதல் புதிய பேருந்து நிலையம் பகுதி வரை SDMF திட்டத்தின்கீழ் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணி நடைபெறும் பகுதிகளில் மண் வேலை செய்யும்பொழுது அதனுள் செல்லும் குடிநீர் பகிர்மான குழாய் கால்வாய் கட்டும் பணிக்கு இடையூறாக உள்ளதால் தேவைப்படும் இடங்களில் இடையூறாக உள்ள குடிநீர் பைப்லைன்களை மாற்றியமைக்க வேண்டிய நிலை உள்ளது. எனவே குடிநீர் விநியோகம் சீராக நடைபெற அவசர அவசியம் கருதி இப்பணிக்கு தேவைப்படும் குடிநீர் உதிரிபொருட்கள் மற்றும் பைப்கள் ஆகியவற்றை உள்ளூர் கடைகளில் வாங்கி உபயோகிக்க உத்தேச செலவினம் ரூ.25000 /– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
(ந.க.எண். 104/2023 இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 333 நாள்: **31.10.2023**

**தீர்மானம்:** தாலுக்கா அலுவலக சாலை முதல் புதிய பேருந்து நிலையம் பகுதி வரை SDMF திட்டத்தின்கீழ் – மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தேவைப்படும் இடங்களில் இடையூறாக உள்ள குடிநீர் பைப்லைன்களை மாற்றியமைக்க வேண்டி, குடிநீர் உதிரி பொருட்கள், பைப்கள் வாங்கி உபயோகிக்க தோராய செலவினம் ரூ.**25000/–** மன்றத்தின் அனுமதி கோரப்பட்டு, அதற்கான ஒப்புதலை மன்றம் வழங்குகிறது.

## பொருள் எண் 13

பொன்னேரி நகராட்சியில் **15**வது நிதிக்குழு மானியம் **2023–24**–ம் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள **17.10.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் **20** பெரியார் தெரு **(183020S160)** மற்றும் பெரியார் குறுக்கு தெருவில் **(183020S161)** சிமெண்ட் சாலை அமைத்தல் | 18.50 | M/s . Land Star Infratech, ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/s O.S & Co ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | வார்டு எண் **24** நக்கீரன் தெரு**(183024R199)** சிமெண்ட் சாலை, நக்கீரன் **1**வது குறுக்கு தெரு **(183024L018)** மற்றும் நக்கீரன் **2**வது குறுக்கு தெருக்களில் **(183024L019)** பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 16.30 | திரு. உ. சலீம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/s முத்தமிழ் கன்ஸ்ட்ரக்ஷன் பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | வார்டு எண் **24** கம்பர் தெரு **(183024S224)** மற்றும் அவ்வை தெருக்களில் **(183024S229)** சிமெண்ட் சாலை அமைத்தல் | **20.00** | திரு. உ. சலீம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/s முத்தமிழ் கன்ஸ்ட்ரக்ஷன் பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | வார்டு எண் **26** காமராஜர் தெருவில் **(183026R226 )** சிமெண்ட் சாலை அமைத்தல் | **5.00** | ஒப்பந்தபுள்ளிகள் கோர எவரும் முன்வரவில்லை | |

<u>அலுவலக குறிப்பு</u>

1 வரிசை எண் 1 முதல் 3 வரையிலான பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

2 வரிசை எண் 4ல் உள்ள பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோர எவரும் முன்வராததால் மறு ஒப்பந்தபுள்ளி கோர மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 334 நாள்: 31.10.2023

**தீர்மானம்:** வரிசை எண். 1 முதல் 3 வரையிலான பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

வரிசை எண். 4ல் உள்ள ஒப்பந்தபுள்ளி கோர எவரும் முன்வராததால் மறு ஒப்பந்தபுள்ளி கோர மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 14

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி **2023—24—**ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள **29.09.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 7 கள்ளுக்கடைமேடு பகுதியில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணி செய்தல் | 1.00 | எல்.ஜி.அரசு , ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஸ்ரீதிருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | நகராட்சி பொறியாளர் அறை மற்றும் பொறியியல் பிரிவிற்கு தேவையான தளவாட பொருட்கள் சப்ளை செய்தல் மற்றும் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல் | 4.50 | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | A.T.சந்தானம், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | நகராட்சி பகுதிகளில் மின்மீட்டர் பொருத்தப்பட்டுள்ள பழுதடைந்த பெட்டிகளை ( EB Box ) புதியதாக மாற்றியமைத்தல் | 1.80 | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | A.T.சந்தானம், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | வார்டு எண் 20 ஜவகர் தெரு மற்றும் வார்டு எண் 21 அன்னை தெரசா தெருக்களுக்கு WMM அமைத்தல் | 3.45 | S.K.பூபாலன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.பாலசுப்பிர மணி, | மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஒப்பந்ததாரர் | |
| 5 | வார்டு எண் 2 புதுவாயல் சாலையில் பழுதடைந்த மழைநீர் வடிகாலினை பழுதுபார்த்தல் | 3.30 | ஸ்ரீதிருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | எல்.ஜி.அரசு , ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 6 | வார்டு 2 அரசூர் சாலையில் அமைந்துள்ள மயான பூமி பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 1.00 | ஸ்ரீதிருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | எல்.ஜி.அரசு , ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 7 | வார்டு எண் 3 எல்லையம்மன் கோயில் 2வது தெரு மற்றும் 3வது தெருக்களுக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 9.20 | ப. சலீம், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | முத்தமிழ் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 8 | வார்டு 6 விவேகானந்தர் தெருவிற்கு GSB அமைத்தல் | 4.80 | ஒப்பந்தபுள்ளி கோர எவரும் வரவில்லை | |

அலுவலக குறிப்பு

1. மேற்படி பணிகளில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்ககளின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்று பணி உத்திரவு வழங்கலாம் .

2. வரிசை எண் 8ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு எவரும் ஒப்பந்தபுள்ளி கோர முன்வராததால் மறு ஒப்பந்தபுள்ளி கோரலாம் . (ந.க.எண் 104 /2023 / இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 335 நாள்: 31.10.2023

**தீர்மானம்:** மேற்படி பணிகளில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கிறது.
வரிசை எண். 8–ல் ஒப்பந்தபுள்ளி கோராததால் , மறு ஒப்பந்தபுள்ளி கோர மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 15

பொன்னேரி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து நிர்வாக பணிகள் கணினி மயமாக்கப்பட்டதால் தினசரி கணினி வசூல் மையத்தில் வரிவசூல் பணி மேற்கொள்ளவும், பிறப்பு இறப்பு பதிவு செய்தல், பிறப்பு இறப்பு சான்றுகளை கணிணியிலிருந்து பதிவிறக்கம் செய்தல் 2 கணிணி இயக்குபவர்கள், நான்கு வாம்பே கழிவறை பராமரிப்பவர், ஐந்து பம்பு ஆப்ரேட்டர், ஒரு இரவு காவலர் மற்றும் அலுவலக பணிகள் தொடர்பாக தட்டச்சு பணிகள் மேற்கொள்ள

திருமதி. K.U. ஸ்ரீலஷ்மி ஆகியோரை அன்னை அஞ்சுகம் சுய உதவிக்குழுவின் மூலம் வெளிக்கொணர்வு முறையில் பணிக்கு அமர்த்திக் கொள்ளவும், ஊதியம் பொதுநிதியிலிருந்து வழங்கிடவும், நகர்மன்ற தீர்மானம் எண் **253**, நாள் **30.06.2023**ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டு அலுவலக பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து அலுவலகப்பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளும் பொருட்டு மேற்படி பணியாளர்களை **01.11.2023** முதல் **31.01.2024** வரை முன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்யவும், செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
(ந.க.எண். 677/2021/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 336 நாள்: **31.10.2023**

**தீர்மானம்:** நகர்மன்ற தீர்மானம் எண். **253**, நாள் **30.06.2023** படி அன்னை அஞ்சுகம் சுய உதவிக்குழுவின் மூலம் வெளிக்கொணர்வு முறையில் பணிக்கு அமர்த்திக் கொள்ளவும், ஊதியம் பொது நிதியிலிருந்து வழங்கிடவும், பணியாளர்களை **01.11.2023** முதல் **31.01.2024** வரை, பணி நீட்டிப்பு செய்யவும், செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் கோரப்பட்டு, மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

## பொருள் எண் 16

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி **2023–24**–ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள **27.09.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் **11** தாயுமான் தெருவில் மழைநீர் கால்வாயின் பக்கவாட்டு சுவர்களை உயர்த்தி மேல்மூடிகள் அமைத்தல் | **15.60** | S.P.Builders, ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | SHKP Construction, ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | வார்டு எண் **15** அம்பேத்கர் தெரு, எட்டியம்மன் கோயில் தெரு, பார்த்தசாரதி கோயில் தெருக்களில் உள்ள மழைநீர் கால்வாயின் பக்கவாட்டு சுவர்களை உயர்த்தி அமைத்தல் | **7.00** | S.P.Builders, ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | SHKP Construction, ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

1. மேற்படி பணிகளில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்று பணி உத்திரவு வழங்கலாம் .
   ( ந.க.எண் 104 /2023 / இ1 )

நகர்மன்ற தீர்மான எண்: 337 நாள்: **31.10.2023**

**தீர்மானம்:** மேற்படி பணிகளில், பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்று பணி உத்தரவு வழங்க அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 17

பொன்னேரி நகராட்சி வார்டு எண் 1 அண்ணா நகர் முதல் மெயின் ரோடு, மிகவும் பழுதடைந்து மழை காலத்தில் பொதுமக்கள் செல்ல மிகவும் சிரமமாக உள்ளதாக பொதுமக்கள் மற்றும் வார்டு உறுப்பினர் புகார் தெரிவித்து சரி செய்து தருமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். எனவே மேற்படி சாலையை சரிசெய்ய தயார் செய்த உத்தேச மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு

1 மன்றம் அனுமதி அளிக்கலாம்
  ( ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 338 நாள்: **31.10.2023**

**தீர்மானம்:** வார்டு எண்.1 அண்ணா நகர் முதல் மெயின் ரோடு, சாலையை சரிசெய்ய உத்தேச மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்பட்டு, மன்றம் அனுமதி அளிக்கிறது.

# நகர்மன்றத்தலைவரால் கொண்டுவரப்படும் மேசைப்பொருள்கள்

## மேசைப்பொருள் எண் 18

பொன்னேரி நகராட்சி 20 வது வார்டுக்குட்பட்ட ஜவகர் தெரு மற்றும் வார்டு எண் 21 அன்னை தெரசா தெருவில் விடுபட்ட பகுதிகளுக்கு சிமெண்ட் சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,20,000/- ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி அளிக்கலாம்
( ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 339 நாள்: 31.10.2023

**தீர்மானம்:** வார்டு 20, ஜவஹர் தெரு, வார்டு எண் 21 அன்னை தெரசா – விடுப்பட்ட பகுதிகளுக்கு சிமெண்ட் சாலை அமைக்க மதிப்பீட்டு தொகை ரூ.1,20,000 மன்றத்தின் அனுமதி வேண்டப்பட்டு மன்றம் அனுமதி அளிக்கிறது.

## மேசைப்பொருள் எண் 19

பொன்னேரி நகராட்சி 7 வது வார்டுக்குட்பட்ட பாரதி நகர் 1வது குறுக்கு தெருவிற்கு தார்ச்சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2,10,000/- ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி அளிக்கலாம்
( ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 340 நாள்: 31.10.2023

**தீர்மானம்:** வார்டு 7 – பாரதி நகர் 1வது குறுக்கு தெருவிற்கு தார்ச்சாலை அமைக்க ரூ. 2,10,000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்பட்டு மன்றம் அனுமதி அளிக்கிறது.

(ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி
திருவள்ளூர் மாவட்டம்.